


**14.11. 2024**

**தலைப்புச் செய்திகள்**

1. மகராஷ்டிரம் மற்றும் ஜார்கண்ட் மாநில 2ஆம் கட்ட சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

2. 71ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா இன்று தொடங்கியது.

3. நாட்டின் முதலாவது பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேருவின் 136-வது பிறந்தநாள் இன்று குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

4. அரசின் திட்டங்கள் மக்களை விரைவாக சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

5. ஆசிய மகளிர் சாம்பியன் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

************

**தேர்தல்**

மகராஷ்டிரம் மற்றும் ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

மகராஷ்டிர மாநிலத்தில் மொத்தமுள்ள 288 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 20ஆம் தேதி ஒரேகட்டமாக தேர்தல் நடைபெறும் நிலையில் பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி சத்திரபதி சம்பாஜிநகர், பன்வேல் ஆகிய இடங்களில் நடைபெறும் பேரணிகளில் இன்று பங்கேற்கிறார்.

மத்திய அமைச்சர் திரு.நிதின்கட்காரி சோலாப்பூர் சாங்கிலியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்கட்சி தலைவரும் திரு.ராகுல் காந்தி நந்தர்பார் Nanded-லும்,

காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே இகத்புரி, புனேயிலும் வாக்கு சேகரிக்கின்றனர்.

இதனிடையே ஜார்கண்ட் மாநிலத்தில் எஞ்சிய 38 தொகுதிகளுக்கு வரும் 20ஆம் தேதி இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் நிலையில் தேசிய

ஜனநாயக கூட்டணி மற்றும் INDI கூட்டணி கட்சி தலைவர்கள் இத்தொகுதிகளில் உச்ச கட்ட பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும் மத்திய அமைச்சருமான திரு.அமித்ஷா பொக்காராவிலும்,

ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவரும் அம்மாநில முதலமைச்சருமான திரு.ஹேமந்த் சோரன் தியோகர், தும்காவிலும், பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

மகராஷ்டிர ஜார்கண்ட் சட்டப்பேரவை தேர்தல் வாக்குகள் வரும் 23ம் தேதி எண்ணப்படுகின்றன.

************

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி வரும் 18, 19-ஆம் தேதிகளில் பிரேசிலில் நடைபெறும் ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக இந்தியா நைஜீரியா மற்றும் ஜி-20 நாடுகளுடன் பரஸ்பரம் மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை பிரதமர் மேற்கொள்கிறார்.

இந்தியாவின் தலைமைத்துவத்தில் ஜி-20 அமைப்பில் ஆப்பிரிக்க யூனியன் இடம்பெற்றுள்ள நிலையில் நடைபெறும் முதலாவது உச்சிமாநாடு இது என்பது குறிப்பிடத்தக்கது.

************

**கூட்டுறவு வார விழா**

71ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா இன்று முதல் வரும் 20ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

வளர்ச்சி அடைந்த பாரதத்தில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு என்ற இந்தாண்டின் கருப்பொருளுடன் நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

உள்நாட்டு தயாரிப்பு மற்றும் சேவைகளை ஊக்குவித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் கடந்த 1953ஆம் ஆண்டுமுதல் தேசிய கூட்டுறவு வார விழா கடைபிடிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

வேளாண் துறை மற்றும் அது சார்ந்த தொழில்களை ஊக்குவித்து ஊரக பொருளாதாரத்தை முன்னெடுத்துச்செல்வது இதன் நோக்கமாகும்.

************

**வர்த்தக கண்காட்சி**

43ஆவது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியை மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் இன்று தொடங்கிவைத்தார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் வரும் 27ஆம் தேதிவரை நடைபெறும் இக்கண்காட்சியில் சீனா, எகிப்து, ஈரான், தென்கொரியா, தாய்லாந்து, துருக்கி மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் பங்கேற்றுள்ளன.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக நாட்டில் நிலக்கரி மற்றும் சுரங்க துறை முன்னெடுப்புகளை இத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு.கிஷன் ரெட்டி தொடங்கிவைத்தார்.

“2047-இல் வளர்ச்சி அடைந்த பாரதம்” என்ற கருப்பொருளின் அடிப்படையில் ஜார்கண்ட், பீகார், உத்திரபிரதேச மாநிலங்களின் கூடுதல் முக்கியத்துவம் சார்ந்த நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறுகின்றன.

************

**ஜவஹர்லால் நேரு**

நாட்டின் முதலாவது பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேருவின் 136-வது பிறந்தநாள் இன்று குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி பண்டிட் ஜவஹர்லால் நேருவிற்கு மரியாதை செலுத்துவதாக பிரதமர் தமது சமூகவலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் ஜவஹர்லால் நேருவின் திருவுருவ சிலைக்கு தமிழக அரசின் சார்பில் மாநில அமைச்சர்கள் திரு.தா.மோ.அன்பரசன், திரு.நாசர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.செல்வபெருந்தகை உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள குழந்தைகள் தின செய்தியில் வளமான, நலமான, பசுமையான உலகில் குழந்தைகளை வளர்க்க உறுதி ஏற்போம் என குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளை ஒட்டி விழுப்புரத்தில் குழந்தை கல்வி பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பழனி தொடங்கிவைத்த இப்பேரணியில் குழந்தைகளுக்கான பாதுகாப்பு சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ராணிப்பேட்டையில் நடைபெற்ற குழந்தைகள் கல்வி மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியில் ஆட்சித்தலைவர் டாக்டர் சந்திரகலா, கல்லூரி மாணாக்கர் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

திருப்பத்தூரில் குழந்தைகள் தினத்தை ஒட்டி குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் தொடர்பான விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தர்ப்பகராஜ், காவல் கண்காணிப்பாளர் ஸ்ரேயா குப்தா உள்ளிட்டோர் தொடங்கிவைத்த இப்பேரணியில் செவிலியர் மாணவிகள் அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

************

**முதலமைச்சர்**

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் மகிமைபுரத்தில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிப்காட் தொழிற்பேட்டைக்கு நாளை அடிக்கல் நாட்டுகிறார்.

130 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள இந்த தொழிற்பேட்டையின் மூலம் 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்படும்.

தொடர்ந்து வாரணவாசி அங்கன்வாடி மையத்தில் ஊட்டசத்தை உறுதி செய் திட்ட இரண்டாம் கட்ட பணிகளை அவர் தொடங்கிவைக்கிறார்.

6 மாதம் வரையிலான குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகங்களை வழங்குவதுடன் குழந்தைகளின் நிலையை தொடர்ந்து கண்காணிக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது.

தொடர்ந்து 26 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் முதலமைச்சர் 51 முடிவுற்ற பணிகளை தொடங்கிவைக்கிறார்.

************

**இலங்கை தேர்தல்**

இலங்கை நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது.

225 நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு 8 ஆயிரத்து 800க்கும் அதிகமான வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

ஒருகோடியே 70 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களித்து வருகின்றனர். அதிபர் அனுர குமார திச நாயகே தற்போதைய பிரதமர் ஹரினி அமர சூர்யா, முன்னாள் அதிபர் ரனில் விக்ரமசிங்கே உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் வாக்களித்துள்ளனர்.

************

**உதய நிதி ஸ்டாலின்**

தமிழகத்தில் அரசின் திட்டங்கள் மக்களை விரைவாகவும், முறையாகவும் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடி வருவாய் வட்டாச்சியர் அலுவலகத்தில் இன்று ஆய்வு மேற்கொண்ட அவர் பட்டா விண்ணப்பங்கள் உட்பட பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

மாதம் ஒருமுறை வட்டார அளவில் கலந்துரையாடல் கூட்டங்களை நடத்த வேண்டும் என கூறிய அவர் சமூகவலைதளங்களில் அரசின் திட்டங்கள் குறித்து மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

************

**மா.சுப்பிரமணியன்**

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மருத்துவமனைகளில் நோயாளிகளுடன் வருபவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

**வாய்ஸ்**

மாநிலத்தில் உள்ள 37 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் பாதுகாப்பு குறித்து அமைச்சர் காணொலி மூலம் ஆலோசனை மேற்கொண்டார்.

************

**பாம்பன்**

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கடலில் 550 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட ரயில் பாலத்தில் பயணியர் ரயில் சோதனை ஓட்டம் இன்று வெற்றிகரமாக நிறைவடைந்தது.

தெற்கு ரயில்வே பாதுகாப்பு ஆணையர் திரு.**A.M.**சவுத்ரி தலைமையில் தூக்குபாலத்தை இயக்கி எஞ்சின் மற்றும் 8 பெட்டிகளுடன் கூடிய இந்த ரயில் 90 கிலோ மீட்டர் வேகத்தில் இயக்கப்பட்டு சோதனை நடைபெற்றது.

************

**இருவரி**

**தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர்** சேர்த்தல் நீக்கல் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம் வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற உள்ளது.

**திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள** சிறப்பு முகாமில் சீனாவை சேர்ந்த இருவரிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள் இன்று விசாரணை மேற்கொண்டனர்.

ஆன்லைன் பண மோசடி தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இவர்களிடம் விசாரணை நடைபெற்றது.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் B.E., B.Tech.,** பட்டதாரிகளுக்கான தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் தெரிவித்திருக்கிறார்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் சீர்மரபின நல வாரிய** உறுப்பினர்களுக்கான அரசின் நல திட்ட உதவிகளை உரிய முறையில் பெற்று பயனடையுமாறு ஆட்சித்தலைவர் திருமதி அருணா கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுவரை 565 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

************

**மணிமுத்தாறு**

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் கன மழை காரணமாக மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

************

**வானிலை**

திண்டுக்கல் மதுரை விருதுநகர் சிவகங்கை புதுக்கோட்டை தஞ்சை மயிலாடுதுறை கடலூர் உள்ளிட்ட 19 மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

************

**ஹாக்கி**

பிஹார் ராஜ்கிரில் நடைபெறும் ஆசிய மகளிர் சாம்பியன் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் ஜப்பான் சீனாவை எதிர்கொள்கிறது.

************

**கிரிக்கெட்**

இந்திய தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான 4ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி Johannesburg-ல் நாளை நடைபெறும்.

4 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

************